# விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு
# இலங்கை கோள் மண்டலம்

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் செயற்படும் இலங்கை கோள் மண்டலத்தில் வெற்றிடமாகவுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளை நிரப்புவதற்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**1. விரிவுரையாளர் வகுப்பு II - வெற்றிடம் 01**

**2. வானியலாய்வு செயன்முறை சார் விளக்கமளிப்பவர் வகுப்பு III - வெற்றிடம் 01**

**3. மின்னியல் மற்றும் வளி பதனாக்கி செயற்படுத்துனர் வகுப்பு III – வெற்றிடம் 01**

## 01. விரிவுரையாளர் வகுப்பு II

**01. பதவி: -** களம்/அலுவலகம் அடிப்படையிலான அலுவலர்கள் சேவை வகுதியில் விரிவுரையாளர் வகுப்பு II - பிரிவு1 (MN 6 - 2025)

**02. சம்பள அளவுத்திட்டம் : -**

MN 06–(ரூபா.62,230 – 10 x 1190 – 11 x 1,360 – 15 x 1,670 – 114,140)

(குறிப்பு. பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் அட்டவணை 3 இன் படி 2026.12.31 வரையில் கொடுப்பனவுகள் செய்யப்படும்.)

**03. வயதெல்லை:** -21 - 35வயதிற்குள் இருத்தல் கட்டாயமானதாகும்.

**04. கல்விசார் தகைமைகள்: -**

(அ) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பௌதிகவியல் அல்லது கணிதத்தை பிரதான பாடமாகவும் கணணி விஞ்ஞானத்தை ஒரு பாடமாகவும் கொண்டு விஞ்ஞானத்தில் விசேட பட்டமொன்றினை பெற்று இருத்தல் வேண்டும் (கணிதம் அல்லது பௌதிகவியலில் விசேட பட்டமொன்றினை பெற்று இருந்தால் பொது விஞ்ஞான உளச்சார்பு பரீட்சையில் கணணி விஞ்ஞானம் ஒரு பாடமாக எடுக்கப்பட்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

**அல்லது**

(ஆ) பௌதிகவியல் அல்லது கணிதம் மற்றும் கணணி விஞ்ஞானம் ஆகியவற்றினை பாடங்களாக கொண்டு முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பில் பொது விஞ்ஞான பட்டமொன்றினை பெற்றிருத்தல்.

**மற்றும்**

(இ) வானியலாராய்ச்சியுடன் அல்லது விஞ்ஞானத்துடன் தொடர்புற்ற ஒரு துறையில் பட்டப்பின் பட்டத்தை பெற்றிருத்தல்.

**05. அனுபவம்:** குறிப்பிட்ட இப் பதவியில் விரிவுரையாளர்/ பேச்சாளர், செயல் விளக்கம் வழங்குபவர் போன்ற இதர பல பதவி நிலைகளில் 3 வருட அனுபவம்.

**06. பௌதிக உடல் தகுதி நிலை :** - நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றும் வகையில் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

**07. ஏனையவை : -**

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒழுக்கநெறி உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான தகைமைகளாவன, இந்த பதவி தொடர்பிலான அறிவிப்பு/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

**08. வெற்றிடங்களின் எண்ணிக்கை:** - ஒன்று (01)

**09. ஆட்சேர்ப்பு முறை:** அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள தகைமைகளினை பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள், எழுத்து மூலமான பரீட்சை மற்றும் படிமுறை இயல்பிலாலான நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

**(அ) எழுத்து மூலமான பரீட்சை**

| விடயம் | அதிகூடிய மதிப் பெண்கள் | தேர்ச்சிக்குரிய மதிப்பெண்கள் |
|---|---|---|
| நுண்ணறிவு பரீட்சை | 100% | 40% |
| பொதுவான பரீட்சை | 100% | 40% |

(ஆ) படிமுறை இயல்பிலான நேர்முகப்பரீட்சை

| பரிசீலனையின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதி கூடிய மதிப் பெண் கள் | ஆகக் குறைந்த மதிப் பெண்கள் |
|---|---|---|
| 1. விரிவுரைகளை நடத்தக் கூடிய செயற்திறன் (அறிமுக வுரைகளை ஆற்றக் கூடிய திறன்) | 60 | ஏற்புடைய தன்று |
| 2. வானியலாராய்ச்சியில் அறிவு | 25 | |
| 3. தொலைநோக்குக்காட்டி பற்றிய அறிவு | 10 | |
| 4. திறன், தலைமைத்துவம், பழக்க நடத்தை, ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறன் ஆகியவை நேர் காணல் குழாமின் தீர்மானமாகும் | 05 | |

## 02. வானியலாய்வு செயன்முறைசார் விளக்கமளிப்பவர் வகுப்பு III

01. பதவி: முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல் அல்லாத சேவை வகுதியின் வானியலாய்வு செயன் முறைசார் விளக்கமளிப்பவர் வகுப்பு III, பிரிவு 2, (MN 1- 2025)

02. சம்பளஅளவுத்திட்டம்: -

ரூபாய்.45,230 – 10 x 540 -11 x 630 – 10 x 890 – 10 x 1,190 – 78>360

(குறிப்பு. பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் அட்டவணை 3 இன் படி 2026.12.31 வரையில் கொடுப்பனவுகள் செய்யப்படும்)

03. வயதெல்லை: - 18 - 30 வயதிற்குள் இருத்தல் கட்டாயமானதாகும்.

04. கல்விசார் தகைமைகள்: -

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி, கணிதம் மற்றும் வேறு இரண்டு பாடங்களில் திறமை சித்தியுடன், ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத்தராதர உயர்தரபரீட்சையில் குறைந்தபட்சம் ஒரு பாடத்தில் (பொது அறிவுப்பரீட்சை நீங்கலாக) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

05. தொழில்சார் தகைமைகள்: - வலை வடிவமைப்பு, கணினி வன்பொருள் பொறியியல் மற்றும் இணைய நிர்வாகம் ஆகியவற்றில் கற்கைகளினை நிறைவு செய்து சான்றிதழ்களைப் பெற்றிருப்பது சிறப்புத் தகுதியாகக் கருதப்படும்.

06. அனுபவம்: - வானியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பணிகளில் பெற்ற அனுபவம் சிறப்புத் தகுதியாகக் கருதப்படும்.

**07. பௌதிக உடல் தகுதி நிலை :** - நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றும் வகையில் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

**08. ஏனையவை : -**

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒழுக்க நெறிஉடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான தகைமைகளாவன, இந்த பதவி தொடர்பிலான அறிவிப்பு/ வர்த்தமானியில் குறிப்பிடப் பட்டுள்ள திகதிக்குள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

**09. வெற்றிடங்களின் எண்ணிக்கை: -** ஒன்று (01)

**10. ஆட்சேர்ப்பு முறை:** அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள தகைமைகளினை பூர்த்திசெய்த விண்ணப்பதாரிகள் படிமுறை இயல்பிலாலான நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**(அ) படிமுறை இயல்பிலாலான நேர்முகப்பரீட்சை**

| பரிசீலனையின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதி கூடிய மதிப் பெண் கள் | தேர்ச் சிக் குரிய மதிப் பெண் கள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வி தகைமைகள் | 15 | ஏற்பு டைய தன்று |
| 2. தொழில்முறைத் தகைமைகள் | 20 | |
| 3. அனுபவம் | 20 | |
| 4. மொழித் தேர்ச்சி | 20 | |
| 5 கணனி குறித்த அறிவு | 20 | |
| 6. நேர்முகப் பரீட்சையின் போது செயன்முறை விளக்கமாக காட்டப்பட்ட திறன் | 05 | |

## 03. மின்னியல் மற்றும் வளி பதனாக்கி செயற்படுத்துனர் வகுப்பு III

**01. பதவி:** - முதல் நிலை அரை தொழில்நுட்பவியல் சேவை வகுதியின் மின்னியல் மற்றும் வளி பதனாக்கி செயற்படுத்துனர் வகுப்பு III – (PL2 – 2025)

**02. சம்பள அளவுத்திட்டம் :** - ரூபாய். 41,800 – 10x490 -10x540 – 10x590 – 12x630 – 65,560/=

குறிப்பு .(பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் அட்டவணை 3 இன் படி 2026.12.31 வரையில் கொடுப்பனவுகள் செய்யப்படும்.)

**03. வயதெல்லை: -** 18 - 45வயதிற்குள் இருத்தல் கட்டாயமானதாகும்.

**04. கல்விசார் தகைமைகள்:** க.பொ.த. (சா/த) பரீட்சையில் குறைந்தது இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் 06 பாடங்களில் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகளுடன் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**(ஆ) தொழில் சார் தகைமைகள்:**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதிகளின் (N.V.Q.) நிலை 2 க்குக் குறையாத அளவில் மின்சாரம் மற்றும் வளிபதனாக்கி தொடர்பான துறையில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பதவிக்கு பொருத்தமான துறையில் இரண்டு (02) வருட அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும். சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் இந்த அனுபவமானது உறுதிப்படுத்தபடல் வேண்டும்.

**05. பௌதிக உடல் தகுதி நிலை. :** - நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றும் வகையில் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

**06. ஏனையவை : -**

(அ) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் ஒழுக்கநெறி உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான தகைமைகளாவான, இந்த பதவி தொடர்பிலான அறிவிப்பு/வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

**07. வெற்றிடங்களின் எண்ணிக்கை:** - ஒன்று(01)

**08. ஆட்சேர்ப்பு முறை: -** தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் ஒரு தொழில்முறை சார் தேர்வு மற்றும் படிமுறை இயல்பிலான நேர்முகப்பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**(அ) தொழில்சார் பரீட்சை**

| பரிசீலனையின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதி கூடிய மதிப் பெண் கள் | தேர்ச் சிக் குரிய மதிப் பெண் கள் |
|---|---|---|
| 1. துறை தொடர்பான அடிப்படை அறிவு | 20 | 40%. |
| 2. மின் சாதனங்களை நிறுவுதல் மற்றும் பழுதுபார்த்தல் தொடர்பான அறிவு | 20 | |
| 3. தொடர்புடைய துறையில் உள்ள உபகரணங்களின் குறைபாடுகளைக் கண்டறிதல் | 40 | |
| 4. துறை தொடர்பான உபகரணங்களைப் பயன்படுத்துவது குறித்த அறிவு | 20 | |

**(ஆ) படிமுறை இயல்பிலான நேர்முகப்பரீட்சை**

| பரிசீலனையின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதி கூடிய மதிப் பெண் கள் | தேர்ச் சிக்குரிய மதிப் பெண்கள் |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | 25 | ஏற்புடை யதன்று |
| 2. மேலதிக தொழில்சார் தகைமைகள் | 40 | |
| 3. மேலதிக அனுபவம் | 20 | |
| 4. மேலதிக தகைமைகள் (ஆங்கில மொழியில் தேர்ச்சி மற்றும் கணணி குறித்த அறிவு) | 10 | |
| 5. நேர்முகப் பரீட்சையின் போது செயன்முறை விளக்கமாக காட்டப்பட்ட திறன் | 05 | |

சுய விபரக்கோவை உள்ளடக்கப்பட்ட சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களாவன, 2025.12.09 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கக்கூடியவகையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது பக்க மேல் மூலையில் தொடர்புடைய பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும். இந்தப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்களினை அமைச்சின் வலைத்தளமான www.most.gov.lk இல் பார்வையிடலாம் .

**செயலாளர்,**
**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு,**
**3வது தளம், செத்சிரிபாய கட்டம் I, பத்தரமுல்லை.**